"குத்தகை மனிதர்கள்" சிறுகதைகள் காட்டும் சமுதாயம்

முனைவர் கா. உஷாராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மெரிட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
இடைகால்

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மார்ச்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.5281/zenodo.14958665

குத்தகை மனிதர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் குன்றக்குடி கி.சிங்கார வடிவேல். இவர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களின் நேர்முக எழுத்தராகப் பணியாற்றுகிறார். மாதவம், இளைப்பாறும் சுமைகள், இலட்சியக் கரங்கள், குத்தகை மனிதர்கள் என்ற சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

குத்தகை மனிதர்கள் சிறுகதைத் தொகுப்பில் குத்தகை மனிதர்கள், பாராட்டு, பேரம், சஸ்பெண்ட ஆர்டர், அனுபவம், மல்லிகா டீச்சர், பெயரு சொல்லாதது, பெருமை, நினைவுகள் சுடும் திருமணத்தில் ஒரு திருப்பம், ஒரு ராஜீனாமா, தைரியம் என பன்னிரெண்டு சிறுகதைகள் உள்ளன. ஆதிமனிதன் உணவைத் தேடி நாடோடியாக அலைந்ததோடு இயற்கை சக்திகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டு ஆற்றங்கதையோரத்தில விவசாயம் செய்து ஒற்றுமையாக ஓர் இடத்தில் நிலையாக வாழத் தொடங்கினார். அதுவே நாளடைவில் மக்கட்தொகை பெருகியதும் சமுதாயமாக மாறியது என்கிறார் தி.சு.நடராசன். இச்சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்தும் முரண்பட்டும் வாழ்கின்றனர்.

குத்தகை மனிதர்கள் என்ற தொகுப்பிலுள்ள "மல்லிகா டீச்சர்" என்ற சிறுகதையில் வரும் மல்லிகா ஆசிரியை மோட்டார் கைக்கிளில் செல்வதற்கான வாய்ப்பு இருந்தும் அதனைத் தவிர்த்து வயல்வெளிகளில் நடந்து சென்று மாணவர்களின் குடும்ப சூழ்நிலையைப் புரிந்து கொள்கிறார்.

"டீச்சரம்மா எம்புள்ள கார்த்தி உங்கக்கிட்டதான ஆறாங்கிளாஸ் படிக்கிறான். ஏதோ கணக்கு நோட்டு வாங்கலைன்னு கணக்கு வாத்தியார் நிக்க வச்சாராம். இன்னைக்கு கூலி வாங்கினவுடனே வாங்கி கொடுத்து விடுறேன் நீங்க அவருக்கிட்ட கொஞ்சம் சொல்லுங்கம்மா." (ப.37).

"டீச்சர் எங்க தோடத்திலே விளைஞ்ச கத்தரிக்காயும் வெண்டைக்காயும், இன்னைக்குத்தான் முதன் முதலிலே பறித்தோம். உங்களுக்குத்தான் கொடுக்கனும்னு என்மகன் சொன்னான். இந்தாங்க டீச்சர்" (ப.38). என்று கிராம மக்கள் மல்லிகா ஆசிரியையிடம் கூறுவதன் மூலம் அம்மக்களின் அன்பை காணமுடிகிறது. மாணவர்களின் நலனில் அக்கறை கொள்வதோடு மட்டுமல்லாமல் கிராம மக்களோடு இணைந்து மாணவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்றதையும் இவ்வுரையாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

மக்களுக்கு செய்யும் சேவைகளில் மருத்துவ சேவையும் ஒன்று. வயிரவன்பட்டி கிராம மக்கள் அவசரத்தேவைக்கு காரைக்குடி நகரத்திற்குச் செல்ல 20 கி.மீட்டர் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வூரில் நடுஇரவில் சிறு குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு மருத்துவம் செய்யும் பாட்டியிடம் எடுத்து வருகின்றனர். தாயின் உணவையும் கைக்குழந்தையின் நிலையையும் அறிந்து பெயர் சொல்லாத மருந்தைப் பயன்படுத்தி குழந்தையின் அழுகையை நிறுத்துகிறாள். வயிரத்தாள்பாட்டி. பின்னர் மருத்துவ முறையை தன்னுடைய பேத்திக்கும் கற்றுக் கொடுக்கிறாள்.

பொழுதுபோக்கிற்காக இளைய தலைமுறையினர் பல செலவுகள் செய்கின்றனர். திரைப்படம் பார்க்க செல்வதற்காக வைத் திருந்த பணத்தை ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதற்காக செலவு செய்கின்றனர். தியேட்டரின் முன்பு பட்டாசு வெடித்தல், பால் அபிஷேகம் செய்தல், இனிப்பு வழங்குதல் என்று பெருமைக்காக செலவு செய்ய நினைக்கும் கல்லூரி மாணவர்கள் 5 வயதிற்கு உட்பட்ட இதயம் பாதிக்கப்பட்ட குழந்தையின் அறுவைச் சிகிச்சைக்காக ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து உதவி செய்கின்றனர். இளைய தலைமுறையினரின் மனமாற்றத்தை “பெருமை” என்ற சிறுகதை மூலம் ஆசிரியர் கூறுகிறார்.

“அனுபவம்” என்ற சிறுகதையில் கிராம நகர மக்களின் இயல்புகளை படம் பிடித்துக் காட்டியுள்ளார். “நேத்திலிருந்து மயக்க மயக்கமா வருது ஆஸ்பத்திரிக்க போயிட்டு வரலாம்னா துணைக்கு ஆட்டோவில் கூட்டிட்டு போறதுக்கு ஆள் கிடைக்கல. வேலைக்காரி ரெண்டு நாளா லீவு பக்கத்து வீடுகளில் யாரையாவது கூப்பிடலாம்னா என்னால எழுந்து போக முடியலடா. பக்கத்து வீட்டிலே என்ன நடக்குது யாரு இருக்காங்க . யாருசெத்தானு கேக்குறதுக்கு கூட நாதி இல்லாத ஊருடா இது.. அவங்க அவங்க வேலையத்தான் பாத்துக்கிட்டு போறாங்க” (பக்.31-32). பக்கத்து வீட்டினர் உடல்நிலை சரியில்லாத நேரத்தில் நகரத்து மக்களின் செயல், உதவி செய்யாத நிலையை இப்பதிவில் காண முடிகின்றது.

நகரத்து மக்களின் பண்புக்கு எதிராக கிராம மக்களின் அன்பை “ஆஸ்பத்திரியில் பக்கத்து வீட்டு பஞ்சவர்ண அக்காவும், அவங்க வீட்டு க்காரர் ஆறுமுக அண்ணனும், கூட இருக்காங்க. நீங்க பயப்படாம உங்க அம்மாவ பார்த்து விட்டு வாங்க நாங்க சுமதி அக்காவ பார்த் திக்கிறோம்” (ப.33) என்ற பதிவில் விஜயனின் மனைவி சமாதிக்கு உடன்நிலை சரியில்லாமல் இருந்த இரவு பொழுதில் கிராம மக்கள் உதவி செய்கின்றதை காண முடிகின்றது. நகரத்து மக்களின் அலட்சியத்தையும் கிராம மக்களின் அன்பையும் இக்கதையில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

ஏழை மக்களுக்கு கிடைக்க வேண்டிய பணம் பாதிக்கப்படுவதை “தைரியம்” கதையில் காணமுடிகிறது. “இந்தாம்மா. இதுல மூவாயிரம் எடுத்திருக்கேன் இந்த பணம் உனக்காக கையெழுத்து போட்ட அதிகாரிகளுக்கு கொடுக்கனும் மீதி ஏழாயிரம் இருக்கு சரியா இருக்கானு எண்ணிக்கிட்டு புறப்படு”

“இந்தம்மா. கரச்சல் பண்ணாம போ அடுத்து வேற ஏதாவது உதவி கேட்டு வந்தா நான் தான் கையெழுத்து போடனும் எதுவும் பேசமா போ”(ப.70) விதவைப் பெண்ணிற்கு அரசாங்கத்தில் இருந்து வந்த பத்தாயிரம் ரூபாய் முழுமையாக கிடைக்கவில்லை. கிராம நிர்வாக அதிகாரி மூவாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு ஏழாயிரம் ரூபாய் மட்டும் வசந்தியிடம் கொடுக்கிறார். ஏழை மக்களுக்கு அரசாங்கம் செய்யும் உதவிகள் முழுமையாக கிடைப்பதில்லை என்றும “அரசு ஊழியர்களின் கையுட்டு நிகழ்வையும் “தைரியம்” சிறுகதையில் ஆசிரியர் கூறுகிறார். அரசாங்கம் செய்யும் தேவையற்ற செலவையும் எடுத்துரைக்கிறார்.

“என்ன சார் பண நெருக்கடி? அரசியல்வாதிகளுக்குப் பின்னாலே ஆயிரம் கார் வருதே அதைக் குறைக்கலாமில்லையா? அலங்கார வளைவுகளுக்கும் கட் அவுட்களுக்கும் செய்யுற செலவுகளைக் குறைக்கலாமில்லையா..? (ப.65).

அரசியல்வாதிகள் பெருமைக்காக செலவு செய்வதைக் குறைத்து மக்களுக்கான அவசியத்

தேவைகளுக்கும் ஆய்வுகளுக்கும் செலவிட வேண்டுமென்று “ஒரு ராஜினாமா” சிறுகதை மூலம் பதிவுசெய்கிறார்.

கல்லூரிக்குச் செல்லும் மாணவன் விக்னேஷ்க்கு புகைப்பிடிக்கும் பழக்கம் இருக்கிறது “நான் சம்பாதித்து உனக்கு காசு கொடுப்பது படிக்கிறதுக்குத் தான் இப்ப நீ செய்கிற செலவு எல்லாம் என் காசு. மற்ற விஷயத்துக்கு அந்த காசை பயன்படுத்துறப்போ என் உடம்பிலே ஓடுற ரத்தம் தான் உன் கையிலே காசா இருக்குதுன்னு நினைச்சுக்கோ” (ப.56). பணத்தின் மதிப்பையும் தந்தையின் உழைப்பையும் அறிந்து விக்னேஷ் மனம் திருந்துவதை “நினைவுகள் சுடும்” என்ற கதையின் மூலம் புலனாகிறது.

வரதட்சனையின்றி மாமன் மகள் உமாவை திருமணம்செய்யநினைக்கும்சுந்தர்.வரதட்சனை மீதுபேராசைகொண்டதாய்காமாட்சிஇருவரின் எண்ணமும் ஆசையும் வடதுருவம், தென்துருவம் போல காணப்படுகிறது. இறுதியில் வாசுகியின் உதவியோடு வரதட்சணையின்றி சுந்தர், உமா திருமணம் நடைபெறுவதை “திருமணம் ஒரு திருப்பம்” என்ற கதையின் வழியாக அறியமுடிகிறது.

ஏழைவிவசாயிகளின் உழைப்பை மதித்து சிலர் செயல்படுதை “பேரம்” சிறுகதையில் காணமுடிகிறது. “காய்கறி கடையாக வச்சிருக்கிற வியாபாரி இந்த கிழவி மாதிரி ஆளுங்க கிட்ட வாங்கி விக்கிறவன். அவங்க கிட்ட பேரம் பேசி விலையை குறைச்சா அவங்களோட இலாபம் தான் குறையும். இந்தக் கிழவி அவங்க வயல்லே விளைஞ்சதை நேரடியாக கொண்டாந்து விக்கிறாங்க இவங்க கிட்ட பேரம் பேசி குறைச்சா அவங்க உழைத்த உழைப்பின் மதிப்பை குறைக்கிறோம்”(ப.19) ஏழை மக்களின் உழைப்பு இடைத்தரகர் மூலம் சுரண்டப்படுகிறது. இச்சுரண்டலைத் தடுக்க வேண்டுமென்பதை பேரம் சிறுகதை வழியாக ஆசிரியர் கூறுகிறார்.

படித்த இளைஞர்கள் தங்களுடைய கல்வியையும் உழைப்பையும் வெளிநாடுகளின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துகின்றனர். “நான் உற்பத்திப் பொருளை மட்டும் தான் ஏற்றுமதி செய்யுறேன் ஆனால் உன்னை மாதிரி உற்பத்தியாளர்களே ஏற்றுமதியாகி விலை போறீங்களே. அதை நிறுத்துங்க முதல்லே.. நாடு முன்னெறிவிடும் (ப.6-7) என்று கொதித்து எழும் கிராமத்து அப்பாவின் உரையில் இந்திய தேசத்தின் அறிவு, வளம், மனிதர்கள் பிற நாட்டிற்கு அடிமையாகும் அவலத்தை “குத்தகை மனிதர்கள் மூலம் எடுத்துரைகிறார்.

பள்ளி மாணவர்களில் படிக்கும் மாணவர்கள், படிக்காத மாணவர்கள் என்று பிரித்தும் நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது, படிக்காத மாணவர்களை குழந்தை தொழிலாளர்களாக மாற்றும் ஆசிரியர்களை “பாராட்டு” சிறுகதையில் சுட்டிக்காட்டுகிறார். புணி செய்கிற இடத்தில் மேலாளர் பதவிக்குரிய தன்மையை “சஸ்பெண்ட் ஆர்டர்” என்ற சிறுகதை மூலம் வெளிப்படுத்துகிறார்.

“கண்டிப்புகளாலும் தண்டனைகளாலும் மட்டுமே நிர்வாகத்தை சீரமைக்க முடியாது. அவர்களைத் தட்டிக்கொடுத்து பாராட்டினா மட்டும் போதாது. பணியாளர்களின் பின்னணி என்னன்னு தெரிஞ்சு அதற்குத் தகுந்த மாதிரி அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வருகிற தலைமைப் பதவிதான் மேனேஜர் பதவி” (ப.26) பணியாட்களின் உழைப்பு மூலமாகத்தான் தொழிலில் முன்னேற முடியும். அத்தகைய பணியாட்களைப் புரிந்துகொண்டு செயல்படுவதுதான் மேளாலர் பதவி என்று இப்பதிவில் ஆசிரியர் புரிய வைக்கிறார்.

சிங்கார வடிவேல் எழுதிய குத்தகை மனிதர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளில் குத்தகை மனிதர்கள், அனுபவம், மல்லிகா டீச்சர், ஒரு ராஜினாமா போன்றவை கிராமம், நகரம். வெளிநாடு என பயணம் செய்து இடப்பெயர்வுகளாலும் புலம்பெயர்வுளாலும் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகின்றன. தைரியம், ஒரு ராஜினாமா சிறுகதைகள் அரசாங்கம், அரசுப் பணியாளர்களின் பேராசையை முன் வைக்கிறது. நினைவுகள் சுடும், பெருமை

என்ற சிறுகதைகள் கல்லூரி மாணவர்கள் கல்வியைத் தவிர திரைப்படம், புகையிலை என அடிமையானதிலிருந்து விடுபடும் தன்மையை எடுத்துக் கூறுகிறது.

எதிர்பாராத நேரத்திலும் கிராம மக்கள் உதவி செய்கிறதையும் அன்பையும் அனுபவம், பெயர் சொல்லாததுகதைகள்வெளிப்படுத்துகின்றன.பாராட்டு, மல்லிகா டீச்சர் என்ற இரு கதைகளிலும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் மனப்பான்மையைக் கூறுகிறது. மாணவாகளின் குடும்ப நிலை, பின்னணி இவற்றைப் புரிந்துகொண்டு ஆசிரியர்கள்செயல்படவேண்டுமென்பதைஇக்கதைகள் எடுத்துரைக்கின்றன. சிங்கார வடிவேலனின் சிறுகதைகள் கிராம மக்களை படிப்பிலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றும் நோக்கத்திலும் சமுதாயத்தின் அவலநிலைகளை சூழ்நிலைகளோடு எடுத்துக்கூறி மனிதர்களின் மனதைச் செம்மைப்படுத்தும் தன்மை காணப்படுகிறது.

துணை நின்ற நூல்கள்

1. குன்றக்குடி கி.சிங்காரவடிவேல்., குத்தகை மனிதர்கள், செப்.2007, சென்னை, அறிவுப் பதிப்பகம்.
2. தி.சு.நடராசன்., திறனாய்வுக்கலை., மே2016., சென்னை., நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.